<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:-திருமதி.எஸ்.சுகனியாஸ்ரீ,B.A.B.L (Hons), M.L., PGDAML
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2024-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் நாள் செவ்வாய்க்கிழமை

*<u>இடைமனு.எண். 242/2024 in அசல் வழக்கு எண்: 235/2013</u>*

1. சுவாமிநாதன்
2. தையல்நாயகி

.... மனுதாரர்கள்/1ம் வாதி/
புதிதாக சேர்க்கப்பட
வேண்டிய 2ம் வாதி

/எதிர்/

1. இராமலிங்க முதலியார் (இறந்துவிட்டார்)
2. சந்திரசேகர முதலியார் (இறந்துவிட்டார்)
3. பர்வதவர்த்தினி
4. பாலகுமாரர்
5. நாராயண குமார்
6. குருநாதன்
7. ஜீவானந்தம்
8. சார்பதிவாளர்
9. சூரியமூர்த்தி
10. R. மணிமேகலை
11. R.ஜெயவேல்
12. R.ஞானவேல்
13. R.தேனப்பன்
14. C. விஜயலட்சுமி
15. C. சோமசுந்தரம்
16. C. சுரேந்தர்
17. சிதம்பரம் வட்டாட்சியர்
சிதம்பரம்
18. தமிழ்நாடு அரசு, அதன் கடலூர் மாவட்ட
ஆட்சியர், கடலூர் மூலமாக
19. புவனகிரி வட்டாட்சியர்
புவனகிரி
20. விமலா
21. சங்கமித்ரா

..... எதிர்மனுதாரர்கள்/ 1முதல் 19
எதிர்வாதிகள்/ புதிதாக சேர்க்கப்பட
வேண்டிய 20, 21 எதிர்வாதிகள்

மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு 9.8.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.சம்மந்தம், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5, 10, 13 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.ஆர்.ரவிச்சந்திரன், அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.மகேஷ், அவர்கள் ஆஜராகியும், 17 முதல் 19 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. கே.எஸ்.இளங்கோவன், அவர்கள் முன்னிலையாகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றா தரப்பினர்களாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்குரை மற்றும் எதிர் வழக்குரையை பரிசீலனை செய்தும், இது நாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

1. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் 2ம் மனுதாரரை 2ம் வாதியாகவும், 20, 21 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 20, 21 எதிர்வாதிகளாகவும் சேர்க்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் 1 விதி 10ன் கீழ் தாக்கல் செய்த மனு.

### மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-

2. இம்மனுவின் 1ம் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி. 2ம் மனுதாரர் 1ம் மனுதாரரின் தாயார் அசல் வழக்கில் 2ம் வாதியாக சேர்க்கப்பட வேண்டியவர் என்றும் 20, 21 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் 20, 21 எதிர்வாதிகளாக சேர்க்கப்பட வேண்டியவர் என்றும், 20, 21 எதிர்மனுதாரர்கள் மனுதாரருடைய சகோதரிகள் என்றும், அசல் வழக்கானது 1ம் மனுதாரருக்கு உரிமையானது என விளம்புகை செய்யக் கோரியும், சொத்து சுவாதீன பரிகாரத்திற்காக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சுப்ரமணிய முதலியார் 2009ம் ஆண்டு இறந்த பிறகு மனுதாரர்களும் 20, 21 எதிர்மனுதாரர்களும் வழக்கு சொத்துக்கள் உள்ளிட்ட அனைத்து சொத்துக்களையும் பொறுத்து ஒரு குடும்ப ஏற்பாடு செய்து கொண்டு அதன்படி வழக்கு சொத்துக்களை 1ம் மனுதாரர் அடைந்து அனுபவித்து வருவதாகவும், அவ்வாறு 1ம் மனுதாரர் அனுபவித்து வந்தாலும் காலஞ்சென்ற சுப்ரமணியனின் அனைத்து வாரிசுதாரர்களும் அசல் வழக்கில் சேர்க்கபடாதது குறித்து எதிர்வாதிகள் கேள்வி எழுப்பி ஆட்சேபனை எழுப்பக்கூடும், எனவே அவ்வகையான ஆட்சேபனைகளை தவிர்க்க 2ம் மனுதாரர் மற்றும் 20, 21 எதிர்மனுதாரர்களும்

வழக்கிற்கு சரியான மற்றும் முக்கியமான தரப்பினர் என்பதால் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்றும், அசல் வழக்கில் 2ம் மனுதாரரை 2ம் வாதியாகவும், 20, 21 எதிர்மனுதாரர்களை அசல வழக்கில் 20, 21 எதிர்வாதிகளாகவும் சேர்க்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>4ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>

3. மனுதாரர் தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை ஆட்சேபணை செய்தும், வழக்கு சொத:தக்களில் 1ம் அயிட்ட சொத்தில் 0.27 ½ செண்ட் மட்டுமே வாதி தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றும் 1வது இனச்சொத்தில் பாக்கி விஸ்தீரணமும் 2 முதல் 6 அயிட்ட சொத்துக்களும் வாதி தகப்பனார் சுப்ரமணியத்திற்கே பாத்தியம் இல்லாத நிலையில் சுப்ரமணிய முதலியார் 2009ல் இறந்த பிறகு அவரது வாரிசுகள் குடும்ப ஏற்பாடு செய்து கொண்டு அதில் 1ம் மனுதாரருக்கு வழக்கு சொத்துக்கள் கிடைத்ததாக கூறுவது உண்மையல்ல என்றும் இவ்வழக்கிற்காக கற்பனையாக கூறப்பட்டவை என்றும், மனுதாரர் தாக்கல் செய்த மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று கூறியுள்ளார்.

4. 6-ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என தெரிவிக்கப்பட்டும் மற்ற எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

5. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

6. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

7. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் வழக்கானது செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுப்ரமணிய முதலியார் 2009ம் ஆண்டு இறந்த பிறகு மனுதாரர்களும் 20, 21 எதிர்மனுதாரர்களும் வழக்கு சொத்துக்கள் உள்ளிட்ட அனைத்து சொத்துக்களையும்

பொறுத்து ஒரு குடும்ப ஏற்பாடு செய்து கொண்டு அதன்படி வழக்கு சொத்துக்களை 1ம் மனுதாரர் அடைந்து அனுபவித்து வருவதாகவும், அவ்வாறு 1ம் மனுதாரர் அனுபவித்து வந்தாலும் காலஞ்சென்ற சுப்ரமணியனின் அனைத்து வாரிசுதாரர்களும் அசல் வழக்கில் சேர்க்கபடாதது குறித்து எதிர்வாதிகள் ஆட்சேபனை செய்யக்கூடும் என குறிப்பிட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். 4ம் எதிர்மனுதாரர் இம்மனுவிற்கு ஆட்சேபனை செய்தாலும், இம்மனுவில் புதிதாக சேர்க்கக்கூடியவர்களை இறந்த சுப்ரமணியத்திற்கு வாரிசுகள் என்பதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், எதிர்மனுதாரர்கள் *“1வது இனச்சொத்தில் பாக்கி விஸ்தீரணமும் 2 முதல் 6 அயிட்ட சொத்துக்களும் வாதி தகப்பனார் சுப்ரமணியத்திற்கே பாத்தியம் இல்லாத நிலையில் சுப்ரமணிய முதலியார் 2009ல் இறந்த பிறகு அவரது வாரிசுகள் குடும்ப ஏற்பாடு செய்து கொண்டு அதில் 1ம் மனுதாரருக்கு வழக்கு சொத்துக்கள் கிடைக்காது” என குறிப்பிட்டிருந்தாலும்* வழக்கு சொத்துக்கள் சுப்ரமணியத்திற்கு பாத்தியமா இல்லையா என்பது குறித்து இம்மனுவில் முடிவு செய்ய இயலாது. அசல் வழக்கு விசாரணையில் மட்டுமே முடிவு செய்ய இயலும். மேலும் சேர்க்கப்பட வேண்டிய எதிர்மனுதாரர்களும் இம்மனுவில் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றாதரப்பனர்களாக்கப்பட்டுள்ளார்கள்.

8 அசல் வழக்கு கோப்புகளை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கையும் அசல் எண்.103/2013 என்ற வழக்கையும் கூட்டு விசாரனையாக நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் எண்.103/2013 என்ற வழக்கு செயலுறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்குகளில் விசாரணை இன்னும் தொடங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. இந்த 2ம் மனுதாரர், 20, 21 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் என்பதாலும், எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தபோதும், இம்மனுவை நிராகரிப்பதற்கான குறிப்பிட்டு எந்த காரணமும் சொல்லப்படவில்லை. அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் அதன் விளைவு எதிர்மனுதாரர்களுக்கே பாதகமாக அமையும் என்பதால் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. தாவா சொத்தில் சம்மந்தப்பட்ட நபர்களை

தரப்பினர்களாக சேர்த்து வழக்கை மேல் நடத்தினால் பல்வேறு வழக்குகள் எழுவதை தடுக்க முடியும். எனவே, 20, 21 எதிர்மனுதாரரையும், 2ம் மனுதாரரையும் அசல் வழக்கில் சேர்த்து வழக்கை மேல் நடத்துவதில் எந்தவிதமாக பாதிப்பும் எதிர்மனுதாரர்களுக்கு இருக்காது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்கள் தாக்கல் செய்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. 2ம் மனுதாரரை 2ம் வாதியாகவும், 20, 21 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 20, 21 எதிர்வாதிகளாகவும் சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 20.8.2024ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Suganiyasri)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.